House Sites for Valaiyars

*15 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Government have received any application from the Valaiyars of Thirumukkanippatti, Ramanathapuram District, requesting to provide them house sites; and

(*b*) if so, the action taken thereon by the Government?

வலையர்களுக்குக் குடியிருப்பு மனையிடங்கள்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு பிற்பட்ட வகுப்பின் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருமுக்காணிப்பட்டி வலையர்கள், குடியிருப்பு மனையிடம் கேட்டு அரசுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்களா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Changing the nomenclature of Piranmalai as "Parambumalai"

*21 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal with the Government to change the nomenclature of Piranmalai in Tirupathur Taluk, Ramanathapuram District as "Parambumalai"?

பிரான் மலையைப் "பறம்பு மலை" என்று பெயர் மாற்றம் செய்தல்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்காவில் உள்ள பிரான் மலையைப் "பறம்பு மலை" என்று பெயர் மாற்றம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.